## <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | : O.S.No. 58/2018 | **CNR No.** | : TNKI113-000065-2018 |
| **Name** | : சிவராஜ் | **Father's Name** | : சின்னதம்பி |
| **Witness for** | : Defendant | **Calling** | : DW1 |
| **Age** | : 55 | **Village** | : திருவணம்பட்டி |
| **Taluk** | : ஊத்தங்கரை | **District** | : கிருஷ்ணகிரி |
| **Start Time** | : 11:15 AM | **End Time** | : 11:30 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 10.09.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் கறவை மாடு வைத்துள்ளேனா என்றால் இரண்டு மாடுகள் வைத்துள்ளேன். நான் இருசக்கர வாகனம் வைத்துள்ளேனா என்றால் சரிதான், கீரோ ஹொண்டா வைத்துள்ளேன். எவ்வளவு ஏக்கர் விவசாய நிலம் வைத்துள்ளேன் என்றால் நிலம் எதுவும் இல்லை. எனது வீட்டிற்கும் ரெட்டிப்பட்டி கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 4 கி.மீ இருக்கும். எனது வீடு எங்குள்ளது என்றால் திருவணம்பட்டியில் உள்ளது. சொந்த வீடா என்றால் ஆமாம்.

(2) வாதி சென்னையனை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சென்னையனை தெரியாது, அவரது மகன் மணியை மட்டும் தான் தெரியும். வாதியிடம் நான் கடன் வாங்கியதாகவும் அதை வங்கீல் உடன் திருப்பி கேட்டும் கடந்த 17.02.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை வாதி

எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் மணிக்கு எதிராக கொடுத்ததாக சொல்லும் புகாரையோ அல்லது தான் கொடுத்த ஏதாவது சட்ட நடவடிக்கைகளில் இருந்து ஆதாராமாக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்திருந்தேன், அதை கல்லாவி காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள் ஆனால் மணி ஆஜர் ஆகாததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மணி என்பவருடன் கடன் வாங்கியதற்கோ அல்லது திருப்பி செலுத்தியதற்கோ ஆதாராமாக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அவரே புத்தகத்தில் எழுதி கையொப்பம் பெறுவார்.

(3) ரெட்டிப்பட்டியை சேர்ந்த கமல்நாதனை தெரியுமா என்றால் தெரியாது. ராஜசேகரை யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேல்பதியை சேர்ந்த சுப்பிரமணி மகன் ராமானுஞ்சன் என்பவர் தான் மணியிடம் இருந்து பணம் வாங்கி கொடுத்தும் சாட்சியாகவும் கையொப்பம் செய்தார். நான் வாதியிடம் கடந்த 20.06.2016 ம் தேதி கடன் வாங்கியதால் தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, வழக்கு கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. நான் வாதியிடம் வாங்கி கடனை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய கடனுக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதி கோரியவாறு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக வாதியை தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்று நிரூபிக்க நடவடிக்கை ஏதாவது எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

**<u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai